முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1205

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.01.2023**, திங்கட்கிழமை

1. அறமெனும் சக்தியே தேசிகா வாழ்க
அன்னதான வள்ளலே அரங்கா வாழ்க
வரம்தந்து சுப்ரமணியர் யானும் இனிதே
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சுபகிருது கலை திங்களில்
**(சுபகிருது வருடம் தை மாதம் 02 ம் நாள் 16.01.2023, திங்கட்கிழமை)**
அரங்கன் சக்தி பெருக எடுத்துரைப்பேன்
வாசிவென்ற ஞானியர்கள் துணையோடு வல்லமைகொண்டு இந்த கலியுகத்தில்
ஆசிதந்து உலகமக்களை எல்லாம் அனைவருக்கும் ஞானியாகும் வாய்ப்பு உண்டுஉண்டு எனக்கூறி
3. கூறியே மாதர்மம் புரிகின்ற
குரு அரங்கனே நீயே கலியின் சிறந்த ஞானி
அறிவு தெளிவு ஞானபலம் கூடி உலகோர்
அரங்கன் உன்பால் சரணடைவு கொண்டு வர
4. வருகவே உயர் சன்மார்க்கத்தை விதைத்து
வள்ளல் தன்மை கொண்ட மாதர்மத்தை பரப்பி
பரப்பியே உலகோரை அன்போடு ஒன்றிணைத்து
பரிபக்குவம் தருகின்ற மகா ஞானியே
5. ஞானியே அரங்கனே உந்தனுள் யானிருந்து
உயர்வாக உலகோர்க்கு பேர் அற்புதம் நிகழ
சிந்தை கலந்து செயல்களாகவும் சித்தியாகவும் சிவதீட்சையாகவும்
உலகோர்க்கு அரங்கன் உன் கரம்பட ஆறுமுகன் யான் செல்கின்றேன்
6. ஆகவே அரங்கன் பலமறிந்து
ஆகவே அரங்கன் தர்ம சக்தி அறிந்து
யுகமக்கள் ஓங்காரக்குடில் நோக்கி வந்தால்
உலகோர்க்கு அழியாமை என்கின்ற ஞானம் உறுதிஉறுதி
7. உறுதி தந்து அரங்கனுள் சர்வ சக்தியாய் கலந்து
உலகத்தில் ஆறுமுகன் யான் உயர் சேவையாற்றுகின்றேன்
கருதிவந்து அரங்கன் திருவடி பணிந்து
கலியுகத்தார் வேதம் ஞானம் என அரங்கன் சன்மார்க்கத்தை ஏற்று
8. ஏற்று முருகா அரங்கா என
எந்நாளும் ஜெப தபங்கள்
ஆற்றல்பட செய்து கொண்டு
அரங்கனின் உண்மை அடிமை என வேண்டிவேண்டி

9. வேண்டி உலகோர் விடாது ஞானம் பயின்றால்
வினவிடுவேன் வேலவன் என் காட்சி சக்தியை
தொண்டு வழியும் அரங்கனின் தூய்மையான ஆசி வழியும்
உலகோர் கண்டு தேறி ஞானிகளாகக் கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—